தேதி : டிசம்பர்19, 2013

# ஆட்சியின் மீது ஐ.மு.கூ. நம்பிக்கையை இழந்துவிட்டதா

**அருண் ஜெட்லி**
*எதிர்க்கட்சித் தலைவர் (மாநிலங்களவை)*

ஐ.மு.கூ. அரசு ஏராளமான துன்பங்களைச் சந்தித்து வருகிறது. அரசின் முடிவு எடுக்கும் திறன் சந்தேகத்துக்கு இடமான வகையில் உள்ளது. பொருளாதார நிலை உயரவில்லை. அமைச்சர்களுக்குள் ஒருங்கிணைப்பு இல்லை. ஊழல்களால் அரசின் மீதான பிம்பம் சேதமடைந்துள்ளது.

பிரதமரை எப்போதும் மாபெரும் தலைவராக கருத முடியவில்லை. ஐ.மு.கூ.வால் அடுத்த தலைமுறை தலைவராக அடையாளம் காட்டப்படுபவரும் எடுபடவில்லை. காங்கிரஸ் தலைவர்களுடன் சிறிது பேசுனாலும் கூட அவர்களின் மனத்தளர்ச்சி தெரிகிறது. ஆட்சி செய்வதற்குரிய நம்பிக்கையை ஐ.மு.கூ. இழந்துவிட்டது. திரும்பி சண்டையிடுவதற்கான உறுதியைக் கூட இதன் தலைவர்கள் இழந்துவிட்டார்கள். செயல்பாடற்ற தன்மை, பிம்பம் குலைவது தவிர இரண்டு தவறுகளும் குவிந்துள்ளன. அதிகாரத் திமிர், அதன் அமைச்சர்கள், தலைவர்களின் அறிக்கைகளில் அதிகமாகவே தெரிகிறது. அதிகாரம் என்பது நிரந்தரமானது என்றும், தங்களுக்குப் பதில் எந்த அரசியல் சக்தியாலும் வர முடியாது என்றும் அவர்கள் நினைத்துக்கொள்கிறார்கள். அதிகப்படியான பிரச்சாரங்களில் அதன் ஆபத்துக்களும் உள்ளன. இது போன்ற பிரச்சாரங்களை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஐ.மு.கூ. தலைவர்கள் மட்டுமே அவர்களது சுய பிரச்சாரங்களைக் கேட்க முடியும். சமீபத்தில் முடிந்த நாடாளுமன்றத் தொடரானது, ஆட்சியில் இருப்பதற்கான நம்பிக்கை மற்றும் திறனை அவர்கள் இழந்துவிட்டார்கள் என்பதற்கு ஆதாரமாக உள்ளது. தொடர் நடைபெறுவதற்கான எந்த முயற்சியும் எடுக்கப்படவில்லை. இந்தத் தொடர் பாதி கைவிடப்பட்டிருக்க வேண்டும். பெரும்பாலான தொந்தரவுகளை ஐ.மு.கூ. உறுப்பினர்கள், அவர்களது கூட்டணி கட்சியினர், ஆதரவாளர்களே செய்தார்கள். தற்போது அங்கீகரிப்பட்ட சட்டத்தில் இடம்பெற்றுள்ள திருத்தங்களை ஐ.மு.கூ. ஏற்றுக்கொள்ள மறுத்ததாலேயே லோக்பால் மசோதா பல ஆண்டுகள் தாமதமானது. அண்ணா குழுவினருடன் பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொண்டார்கள். 29.12.2011 அன்று எனது திருத்தங்களை ஏற்றுக்கொள்ள அவர்கள் மறுத்துவிட்டு, நள்ளிரவுக்குக் கூட்டத்தொடரைத் தள்ளிவைத்தார்கள். தேர்வு குழுவின் பரிந்துரைகளை ஏற்பதற்கு அவர்கள் மறுத்துவிட்டார்கள். பெட்டிக்குள் தேர்தல் என்ற போர்வையை மடித்து வைக்க வேண்டியுள்ளதால் அவர்களது திமிர்த்தனம் முற்றிலுமாகச் சிதைந்துள்ளது. தற்போது அனைத்து யோசனைகளும் சாதகமாகவே வருகின்றன. களத்தில் அவர்களது தலைவர் தாமதமாகவே கலந்துகொண்டார். இந்த நடவடிக்கையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக, முற்றிலும் எதிர்மறையாக மக்களவையில் அவர் பேசிய 'மாற்று விளையாட்டாளர்' பேச்சைக் கூட மறந்துவிட்டார்.

ஆம் ஆத்மி கட்சியைச் சமாளிப்பதற்கு ஐ.மு.கூ. என்ன விளையாட்டு திட்டத்தை வைத்துள்ளது. ஆம் ஆத்மி கட்சியை காங்கிரசின் பி டீம் என்று சொல்வது முற்றிலும் சரியில்லாததாக இருக்கலாம். தற்போது காங்கிரஸ் கட்சி, ஆம் ஆத்மி கட்சியின் பி டீமாகச் செயல்பட ஒப்புக்கொண்டதன் மூலம் - திரும்பி போரிட வலு இல்லை என்பதற்கு மற்றொரு ஆதாரமாகக் கொள்ளலாம். தெலுங்கானாவில், கட்சி தொடர்ந்து தொடர்ந்து முரணாக இருந்து வருகிறது. உண்மையில் ஒரு தனி மாநிலம் பிரிக்கப்பட வேண்டும். ஆனால் ஆந்திர பிரதேசத்தின் இரண்டு பகுதிகளின் பிரிதிநிதிகளையும் பேச்சுவார்த்தைக்கு வரவைத்து, யாரும் சட்டத்துக்குப் புறம்பாக நடந்துகொள்ள மாட்டோம் என்று வாக்குறுதியைப் பெறும் திறனை அரசு இழந்துவிட்டதாகத் தோன்றுகிறது. பொருளாதாரத்தைப் புதுப்பிப்பதற்கோ, அரசின் முடிவெடுக்க முடியாத நிலையை மேம்படுத்துவதற்கோ அல்லது ஊழல் நிறைந்த

அரசு என்ற சாதனை மீதோ எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஐ.மு.கூ. தனது தவறுகளின் மூலம் பாடம் கற்கவில்லை. 2ஜி ஊழல் மீதான நாடாளுமன்றக் கூட்டுக் குழுவின் போலியான அறிக்கையை எந்த விதமான விவாதம் இன்றி திணிப்பதில் மட்டும் முயற்சி செய்து வருகிறது. நாடாளுமன்றக் கூட்டத்தின் கடைசி நாளில், சமூக வன்முறை மசோதாவை மாநிலங்களவையில் அறிமுகப்படுத்துவதன் மூலமாக அழுத்தம் தருவதில் உள்துறை அமைச்சர் தனது பணியைச் செய்தார். இந்த மசோதா பிரிவினையை ஏற்படுத்தக்கூடியது. இது சமூகத்தைப் பிளவுப்படுத்த முயல்கிறது. இது அரசியல் சட்டத்தின் கூட்டாட்சி முறையை மீறுவதாக உள்ளது. இந்த நோக்கங்கள் பொருத்தமற்றது என்றாலும் கூட,உள்துறை அமைச்சகத்தின் திறமையின்மையால் அறிமுகப்படுத்துவதில் இருந்து தடுக்கப்பட்டது. இதனால் திட்டத்தில் உள்ள பட்டியலில் படி, மசோதாவின் அச்சிடப்பட்ட பதிப்பைப் பெற முடியவில்லை.

தற்போது இது ஐ.மு.கூ.வை நொண்டி வாத்து அரசு என்று குறைத்து மதிப்பிடுகிறோம். உண்மையில் இது செத்துப் போன வாத்து ஆகும்.